# செய்யுள் - காற்றே வா

1.காற்றே வா என்னும் தலைப்பில் அமைந்த பாரதியாரின் வசனகவிதையை உம் பாடப்பகுதி கொண்டு நிறுவுக: (அல்லது)

'காற்றின்றி அமையாது உலக உயிரியக்கம்' என்பதை பாரதியாரின் வசனகவிதை வாயிலாக நிறுவுக:

"காற்றே வா

- பூக்களிலிருக்கும் மகரந்தத் தூளைச் சுமந்து வா.
- மனத்தை மயக்கச் செய்யும் இனிய வாசனையுடன் வா!
- இலைகளின் மீதும் நீர் அலைகளின் மீதும் உராய்ந்து வா.

காற்றே நீ

- எமது உயிர் நெருப்பை நீடிக்கச் செய்து ஒளி தருமாறு நன்றாக வீசு.
- அதற்காக நீ சக்தி குறைந்துபோய் அதனை அவித்து விடாதே!
- பேய் போல வீசி அழித்து விடாதே.
- மெதுவாக, சீரான நலத்துடன் நெருங்காலம் நின்று வீசிக் கொண்டிரு.
- உனக்குப் பாட்டுகள் பாடுகின்றோம்.
- உனக்கு புகழ்ச்சிகள் கூறுகின்றோம்.
- உன்னை வழிபடுகின்றோம்.

2.வசனகவிதை - குறிப்பெழுதுக:

- உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம்.
- இது பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இதன் தொடர்ச்சியே புதுக்கவிதையின் வளர்ச்சி.

3. பாரதியார் - குறிப்பெழுதுக:

பெயர்: சுப்பிரமணிய பாரதியார்
பெற்றோர்: சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மாள்
பிறந்த ஊர்: எட்டயபுரம்
வேறு பெயர்கள்: மகாகவி, பாட்டுக்கொரு புலவன், நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா,சிந்துக்குத் தந்தை.

பணி: செய்தியாளர்
பன்முகத்தன்மை: கவிஞர், எழுத்தாளர், விடுதலை வீரர், கட்டுரையாளர், இதழாளர், சிறுகதை ஆசிரியர்
படைப்புகள்: பாஞ்சாலி சபதம், பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு
காலம்: 11.12.1882 முதல் 11.9.1921 வரை
சமுதாய ஏற்றத்தாழ்வுக்கும், பெண் அடிமைக்கும் எதிராகப் பாடல்கள் எழுதினார்.
இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.